சிப்காட் வளாகத்தில் 43 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் கிட்டத்தட்ட 5,000 பேர் பணியாற்றி வருகிறார்கள். இன்னும் அந்தப் பகுதியில் 490 ஏக்கர் நிலம் இருக்கின்றது. தொழில்முனைவோர்கள் தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், டிட்கோவுடன்—Joint venture—கூட்டு முயற்சியின் வாயிலாக, புதிய தொழில் தொடங்குவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

111—

புதிய பேருந்து

***14412—திரு. ஆர்.என். கிட்டுசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோட்டிலிருந்து மொடக்குறிச்சி, சிவகிரி, முத்தூர் வழியாக பழனிக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் கொடி அசைத்து துவக்கி வைக்கப்பட்டு, ஈரோட்டிலிருந்து மொடக்குறிச்சி, சிவகிரி, முத்தூர் வழியாக பழனிக்கு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.*

திரு. ஆர்.என். கிட்டுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியை அவையில் எழுப்பும் முன்னரே அந்தக் கேள்விக்கான விடையைக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல்,*

பேருந்து போக்குவரத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் கொடி அசைத்து துவங்கி வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) மொடக்குறிச்சி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்த வாழும் வள்ளல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை கொடுமுடியிலே கட்டப்படுமா என்று கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கேள்வி எழுப்பியபோது, அது உடனடியாக ரூபாய் 50 இலட்சம் செலவில் கட்டிக்கொடுக்கப்படும் என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், அதைக் கட்டிக் கொடுத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்களுடைய திருக்கரங்களால் திறந்துவைத்துள்ளார்கள். மொடக்குறிச்சி, கொடுமுடி பகுதி மக்களுக்கு நல்ல பல திட்டங்களைக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே அந்தப் பகுதியில் பேருந்து ஒரு நடை மட்டும் இயக்கப்படுகிறது. அந்த வழித்தடத்தில் முழு நேரம் அதை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை இந்த நேரத்தில் அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டிலிருந்து பழனி செல்லக்கூடிய பேருந்தின்மூலம் சராசரி நாள் ஒன்றுக்கு 8,891 ரூபாய் வருவாயாக ஈட்டப்படுகிறது. மேலும், பயணிகளினுடைய அடர்வு 62 சதவிகிதம் இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, முழுநேரம் அந்த வழித்தடத்தில் பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

திரு. ஆர்.என். கிட்டுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று மீண்டும் அந்த வழித்தடத்தில் தொடர்ந்து பேருந்துகள் இயக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

கொடுமுடி பகுதியிலே பணிமனை துவங்கப்பட்டு இருக்கின்ற இந்த நேரத்திலே, கொடுமுடியிலிருந்து திருப்பூருக்கு தாமரைப்பாளையம், சோழங்காபாளையம், எழுமாத்தூர், அவல்பூந்துறை, வெள்ளோடு, பெருந்துறை வழியாகவும், ஈரோட்டிலிருந்து ஜேடர்பாளையத்திற்கு சோலார், சோழந்தபாளையம், பாசூர், சோழசிராமணி, கொத்தமங்கலம் வழியாகவும், பெருந்துறையிலிருந்து வெள்ளோடு, பூந்துறை, எழுமாத்தூர், சோழவந்தாபாளையம், பாசூர், சோழசிராமணி கொத்தமங்கலம் வழியாக ஜேடர்பாளையத்திற்கும் புதிய பேருந்து வழித்தடங்களை உருவாக்கிக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் ஈரோடு மாவட்டத்தையும், நாமக்கல் மாவட்டத்தையும் இணைக்கின்ற விதமாக காவேரி ஆற்றின் குறுக்கே, கதவணை வழியாக பாசூரில் ஒரு மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. இதனால், இந்த இரண்டு மாவட்ட மக்களுக்கும் தொடர்ந்து போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவதற்கு ஒரு அரிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. அந்த வாய்ப்பினை பயன்படுத்தி, புதிய வழித்தடங்களை உருவாக்கி, அவ்வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஈரோடு மாவட்டத்தில் மட்டும் மூன்றாண்டுகளில் 48 புதிய வழித்தடங்களில் பேருந்து வசதிகளைத் துவக்கி வைத்துள்ளார்கள். அதில், மொடக்குறிச்சி தொகுதிக்கு 6 புதிய*

வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க மாண்புமிகு அம்மா அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்துள்ளார்கள்; அந்த வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற புதிய வழித்தடங்களில் ஆய்வு செய்து, பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதிக்குட்பட்ட கரடிக்குப்பம் ஊராட்சி, தொகுதியின் கடைக்கோடி ஊராட்சி ஆகும். அந்தப் பகுதி மக்கள் சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து இன்றுவரை பேருந்தைப் பார்த்ததில்லை. எனவே, கரடிக்குப்பத்தில் துவங்கி, எதப்பட்டு வழியாக, அவலூர்பேட்டை, மலையனூரை இணைத்து, செஞ்சி வழியாக ஒரு நகரப் பேருந்து* (Town bus) *வசதி ஏற்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், செஞ்சி தொகுதியில், இரண்டு புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்க உத்தரவிட்டு, அந்த வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, பயணிகளின் எண்ணிக்கைக்குக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*